மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.13/2014

வாக்குமூலம். பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலு | ஜாதி | |
| த/பெ. | நாகு தேவர் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 73 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 18.07.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் 1-ம் பிரதிவாதி / என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தை என் தரப்பு விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் பேரில் ஏற்பட்ட 27.03.1991 தேதி பதிவு கிரையப்பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.01.1992 தேதிய என் மனைவி பேரில் ஏற்பட்ட பதிவு கிரையப்பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்களுக்கு என் பேரில் ஏற்பட்ட 05.01.2010 தேதிய பட்டா மாறுதல் உத்தரவு அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான செட்டில்மெண்ட் நிலஅளவை பதிவேட்டின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான நகர நிலஅளவை திட்ட அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான நகர நிலஅளவை திட்ட தூய சிட்டா சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான நகர புலவரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான என் பேரிலான பட்டா அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.